னுடைய தேவையைக் கருதி, பதினைந்து படுக்கைகளைக் கொண்ட ஒரு 'வார்டு' அந்த மருந்தகத்தில் அமைக்கப்படுவதற்கு 74,000 ரூபாய் அளவுக்கு நிதி ஒதுக்க 30—7—1971-இல் அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது.

திரு. என். டென்னிஸ்: அது எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: உத்தரவிட்டதற்குப் பின்னால், அது பொதுப் பணித் துறையினரால் கட்டப்பட வேண்டும். அவர்கள் அதற்கான டெண்டர் கோரி, அதற்குப் பின்னர்தான் கட்ட வேண்டும். எனவே, அது மற்றொரு துறையின் பரிசீலனையிலும் நடைமுறையிலும் இப்பொழுது இருக்கும்.

* 172 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to upgrade the Tengapattanam Government Dispensary in Kanyakumari district into a Hospital; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) இல்லை.

THIRU N. DENNIS: Sir, may I know whether Government would construct separate wings for women in view of the large Muslim population in that area?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அரசாங்கம் மேற்கொள்ளுகிற எந்த ஒரு விதமான மருத்துவ வளர்ச்சிப் பணியும் சில முறைகளோடும் சில முன்னுரிமைப் பிரச்சினைகளோடும் சேர்த்து எண்ணப்பட வேண்டியதாக இருக்கிறது. ஆகவே, இப்போதுள்ள தேங்காப்பட்டணம் மருத்துவமனை அரசாங்கக் கட்டடமாக அமைந்திருக்கிறது. அதற்கு மேற்பட அதிகமாகச் செய்வதற்கு இப்பொழுது அரசாங்கத்திற்கு உத்தேசம் இல்லை.

சூலூர் அரசு மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சைக்கூடம்.

* 173. வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பல்லடம் தொகுதி சூலூரில் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரியில் ஆப்பரேஷன் பிரிவு ஒன்று ஆரம்பிக்கும் உத்தேசம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

திருவாரூர் அரசு மருத்துவமனைக்குக் கட்டடம்.

* 174. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூரில் உள்ள அரசினர் மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்டப்படுகிறதா?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீட்டுச் செலவு என்ன?